
# நல்ல தீர்ப்பு



செந்தமிழ் நிலையம்

# நல்ல தீர்ப்பு

புரட்சிக் கவிஞர்
*பா ர தி தா ச ன்*

**செந்தமிழ் நிலையம்**

இராமச்சந்திரபுரம் :-: புதுக்கோட்டை மாவட்டம்.

ஒன்பதாம் பதிப்பு : 1979.

முழு உரிமை செந்தமிழ் நிலையத்தாருக்கே

ரூ. 1-40

விற்பனை உரிமை

பாரி நிலையம்
59, பிருட்வே
சென்னை 1.

Madras Ripon Press, Pudukkottai. - 6716

'அழகின் சிரிப்பை' த் தந்த கவிஞர் 'நல்ல தீர்ப்பை' யும் தந்துள்ளார், அள்ளித் தெளித்திருக்கும் சுவையமுதம் நாடகத்திலும் வசனத்திலும் மிளிர்கிறது.

பழமைகண்ட நமக்குப் புதுமையிலும் ஒரு புது வழியைக் காட்டுகிருர் புரட்சிக் கவிஞர்.

வற்ருத சொற்சுவையும் குன்ருத அழகும் மலிந்த இந்த 'நல்ல தீர்ப்பு' ஒன்பதாம் பதிப்பாகிறது.

செந்தமிழ் நிலையத்தார்.

# இவர்கள் யார்?

| | | |
|---|---|---|
| வய்வரி மன்னன் | ... | பிறைநாட்டின் அரசன் |
| கன்னல் | ... ... | அரசி |
| முல்லை | ... ... | மகள் இளவரசி |
| மாழை | ... ... | படைத் தலைவன் |
| கண்ணி | ... ... | அவன் மனைவி |
| கிள்ளை | ... ... | அவர்கள் மகள் |
| வல்லுளி | ... ... | அமைச்சன் |
| வேலி | ... ... | அவன் மனைவி |
| சாலி | ... ... | அவர்கள் மகள் |
| கடம்பன் | ... ... | பீலி நாட்டரசன் |
| ஆம்பல் | ... ... | அரசி |
| நிலவு | ... .... | அவர்கள் மகள் |

# நல்ல தீர்ப்பு

பிறை நாட்டின் தென்புறத்தில் அமைந்த குளிர் மலர்ச் சோலையில், கோடையின் கொடுமை நீங்கி இருக்க, அந்நாட்டரசனுகிய வயவரி மன்னனும், அரசி கன்னலும், இளவரசி முல்லையும் வந்திருந்தனர். பிறை நாட்டின் படைத் தலைவன் மாழையும், மனைவி கண்ணியும், மகள் கிள்ளையும் வந்திருந்தனர். நாட்டின் அமைச்சு வல்லுளியும், மனைவி வேலியும், மகள் சாலியும் வந்திருந்தனர். மற்றும் கல்விச் செல்வரும் பொருட் செல்வரும் உறவோடு வந்திருந்தனர்.

மற்றும் பிறை நாட்டின் மேற்கில் உள்ளதும் பிறை நாட்டின் சிற்றரசாய் அமைந்ததும் ஆகிய பீலி நாட்டின் மன்னன் கடம்பனும், அரசி ஆம்பலும், இளவரசி நிலவும் வந்திருந்தனர். குளிர் மலர்ச் சோலையில், அவர்கள் இனிதாக நாள் கழித்தார்கள், ஒவ்வொரு நாளும் விழா நாள்.

இன்று மகளிர் தனி நாள்.

சிற்றரசன் மகள் நிலவு அரங்கேறுகின்ருள். மற்றப் பெண்டிர்கள் காட்சி காணும் அவாவோடு சூழ வீற்றிருக்கின்றனர்.

இசைக் கருவிகள் வாய் திறக்கின்றன. ஆடலாசிரியன் பாடுகின்ருன்.

நிலவு ஆடுகின்ருள்

களை யெடுத்தார் பல பெண்கள்!—கீழ்க்
கவிந்தனவே அவர் கண்கள்!
வளை குலுங்கும் கைகள்! வளைந்திடும் மெய்கள்
விளைவைக் கொடுக்கும் அல்லி, குவளை, செந்தாமரைக்
களை யெடுத்தார் பல பெண்கள்

மண்டும் களைகள் தமை
நண்டு நிகர் விரல்கள்
கொண்டு களைவதொரு காட்சி!
கெண்டை உலவுகையில்
பெண்டிர் விழிகள் தமைக்
கண்டு நாணும், என்ன வீழ்ச்சி!
தொண்டை இனிய கற்
கண்டோ மலரில் வரும்
வண்டோ? என இசைக்கும்
தண்டமிழ் இசை பாடிக்
களை யெடுத்தார் பல பெண்கள்

கூந்தல் அவிழ்ந்து விடும்
வாய்ந்த அருவிபோல்!
ஏந்தி முடிக்கும் அவர் அங்கை!
சோர்ந்தே விழுந்து விடும்
மேலுடை, நூலிடையில்
தூக்கிச் செருகும் அவர் செங்கை!
ஆர்ந்த மயிலினங்கள்
ஆடுகையில் தாள் பெயர்ந்து!
தீர்ந்த இடத்தை விட்டுத்
தீராத நன்செய் இடைக்
களை யெடுத்தார் பல பெண்கள்!

அரசி கன்னல்: ஆ! நான் எங்கே இருக்கின்றேன்? மகிழ்ச்சியன்றி மற்றொன்றும் இல்லாத இன்ப உலகிலா!

முல்லை: என் நினைவு என்னிடம் இல்லையம்மா! இளவரசி நிலவு ஒருத்தி: அவள் ஆடத் துவக்கியவுடன் அவளிடம் களை எடுக்கும் பெண்கள் பலரைக் கண்டேன் அம்மா!

படைத் தலைவன் மகள் கிள்ளை, தங்கச் சிலை போல் இன்னும் செயலற்றுக் கிடக்கின்றாள். அமைச்சன் மகள் சாலி, நெஞ்சில் இன்பம் தாங் காமல் அழுகின்றாள். அவள் கண்கள் மகிழ்ச்சியை நீராக்கி வடிக்கின்றன.

பேரரசி கன்னல் அரங்கின் மேல் ஏறுகிறாள். நிலவின் கலைத்திறம் பற்றிப் பாராட்டிப் பேசலுற்றாள்.

நிலவே, உன் கலைவாழ்வு பல்லாண்டு நிலவுக!

நிலவே, உன் வாழ்நாள் காவிரிபோல் பெருகுக!

துன்ப உலகினின்றும் இன்ப உலகிற்கு எமை அழைத்துச் சென்றாய். தாழ்ந்த செயல்களை, தாழ்ந்த நினைவுகளை இமைப்போதும் நீங்காத எம்மை அமைதியில் குளிக்க வைத்தது உன் ஆடல்!

நிலவே! இத்தனை பெரிது; இத்தனை சிறந்தது; இத்தனை இன்பம் பயப்பது; ஆட்டக்கலை என்பதை இன்று அறிந்தோம்.

ஆடல், பாடல், அழகு எனும் மூன்றின் ஒன்றும் குறையாத முழுநிலவே, நான் இன்று உனக்குத் தரும் பரிசு ஒன்று.

உன் தந்தை எம் அரசர்க்கு நடக்கவும் தெரி யாத இள யானைக் கன்று ஒன்றைத் தந்தார். அந்த ஆண் யானைக் கன்றானது எம்மிடம் முப்பது ஆண்டு கள் வாழ்ந்து பின், இறந்தது. அதன் தந்தமானது முத்துப்போல் ஒளியுள்ளதாகவும், வயிரம் போல உறுதியுள்ளதாகவும் இருந்ததால் அதைப் பொற் கொல்லரிடம் தந்தோம். அவன் அந்தத் தந்தத்தில், அறுத்து, வயிரம் பதித்துத் தந்தது இந்தப் பதக்கம். அதை உனக்குத் தந்தேன்.

[பேரரசி, நிலவுக்குப் பதக்கமார்பணி சூட்டு கிறாள். அனைவரும் கை தட்டுகிறார்கள்]

நிலவு கூறுகிருள்:

பேரரசியாருக்கு நான் நன்றி செலுத்துகிறேன். ''நான் பிறந்த அன்று, இந்த யானைக் கன்று பிறந்தது. ஆறு தினங்கள் சென்றபின் என் தந்தை அதைப் பேரரசர்க்கு அளித்தார்'' என்று என் தாயார் சொன்னுர்கள். அதன் தந்தத்தால் எனக்கு இந்த வயிரப் பதக்கத்தைத் தந்ததால் எனக்கு எவ்வளவு மகிழ்ச்சி எற்பட்டிருக்கும் கருதுங்கள்!

[அனைவர்க்கும் வியப்பு]

படைத்தலைவன் மகள் கிள்ளை கேட்டாள்:

அப்படியானுல், அம்மையாரே தங்கள் வயது என்ன?

உடனே அமைச்சன் மகள் சாலி கேட்டாள்:

யானைக் கன்று வளர்ந்து, இறந்து, பல்லாண்டுகள் போயின. தந்தத்தால் அணிசெய்து பல்லாண்டுகள் கழிந்தன!

கூடவே பேரரசியார் கூறினுள்:

ஏறக்குறைய உனக்கு ஐம்பது ஆண்டுகள் ஆயினவா? என்ன புதுமை?

நிலவு கூறினுள்:

எனக்கு ஐம்பது ஆண்டுகள் ஆயின. என் தந்தை எழுபது வயதுடையவர். அன்னைக்கு அறுபத்தெட்டு.

பேரரசி: உலகைத் தன் வலிய கையோடு கொண்டு போகும் ஆயுள் நாள், நிலவே உன்னை மறந்து, விட்டுப் போனதா? கரையற்ற கால வெள்ளத்துக்குத் தப்பி நிலவே நீ எந்தக் கரையில் நின்றிருந்தாய்? உதிர்கின்ற நாளின் சருகு போன்ற இளமை, உனக்கு மட்டும் ஆலின் விழுது போல் ஊன்றி நின்றதென்ன? உடல் நூல் வல்ல

மருத்துவனும், உயிர்ப்பினைக் கட்டுப் படுத்தும் அறிஞனும் நாளோடு தவருது காணும் முதுமையை நீ சந்தித்ததில்லை எனில் புதுமை அன்ருே!

**நிலவு கூறினுள்.**

ஆடல் பயில்வாரின் உடல் வாடல் இல்லை. புதுமை மாருத ஆடற்கலைஞருக்கு முதுமை நேருமோ பேரரசியாரே?

[அனைவர் கண்ணிலும் வியப்பு]

**பேரரசியார் பேசுகின்ருர்.**

நிலவே! நீடுவாழ்க. புதியதோர் எண்ணம்! நினைக்கும் தோறும் வியப்பைச் செய்யும் ஓர் ஒப்பற்ற நிலை நீ தந்தாய் நீ வாழ்க!
ஆடல் அரங்கு முடிவு பெற்றது. அனைவரும் உணவு கொள்ளச் செல்வோமாக.

[அனைவரும் செல்கிருர்கள். படைத் தலைவன் மகளாகிய கிள்ளை மட்டும் பறக்கவில்லை]

## காட்சி 2

[அரங்கில் ஒரு புறம். நிலவு காற்சதங்கையை அவிழ்க்கக் குனிகிருள். அதற்குள் வேருேர் மலர் போன்ற கை சதங்கையை அவிழ்த்து உதவி செய்கிறது.]

**நிலவு :** என் செல்வமே! நீ யார்?

**கிள்ளை :** அன்னையே! படைத்தலைவர் மகள்; கிள்ளை

**நிலவு :** உன் பிரிவு உன் அன்னை தந்தையர்க்குத் துன்பத்தைச் செய்யுமே!

**கிள்ளை :** ஆடல் பயிலவிரும்புகிறேன். அந்த விருப்பம் என் உடலின் ஒவ்வோர் அணுவிலும்

கிளர்ச்சி செய்கிறது. என் அவா பருவக்காற்றுப் போல் எழுந்து பின் மாறுவதன்று; யானை கட்ட ஒன்றிய தறிபோல் உறுதி கொண்டது. பசி கொண்டு கேட்பவனுக்கு ஓர் அகப்பைக் கஞ்சி மறுப்பாரோ. என் வேண்டுகோளைத் தாங்கள் மறுப்பீரோ! ஆடல்; தங்களிடம் உள்ள கடல் போன்ற ஆடற்கலை. கொஞ்சம் இறங்குவீர்களா?

நிலவு : தசை சரியாத கொடி போன்ற மேனி, உடுக்கை போன்ற இடை, காதளவு நீண்ட கண்ணில் உயிர்! இதழின் கடையில் இயற்கையில் சிந்தும் சிறு நகை. அத்தனையும் உனக்கு அமைப்படி கிள்ளையே! ஆடல் உனக்கு வரும். ஆடலுக்கு நீ வந்தவள். பீலி நாட்டில் தடாரி வட்டம் என்னும் வட்டத்தில் நான் வாழ்கின்றேன். அங்கு நீ வருதல் வேண்டும். ஏற்பாடு செய். நான் செல்லுமுன் கூறு.

கிள்ளை : என்னை தந்தையரிடம், கெஞ்சி, அவர்கள் தரும் விடையை அறிவிக்கின்றேன் அம்மணி

நிலவு : போய் வா

[கிள்ளை பணிந்து, பறந்தாள்]

நிலவு குளிர் மலர்ச் சோலையில் தனக்காக அமைந்த விடுதி நோக்கிப் போகிருள். சாலி என்னும் அமைச்சன் மகள் எதிர் நோக்கி வந்து பணிகிருள்

நிலவு : நீ யார்?

சாலி : நான் சாலி,

நிலவு : தந்தை?

சாலி : இந்நாட்டின் அமைச்சர் வல்லுளியார்

நிலவு : என்ன செய்தி?

சாலி : எனக்கு நீங்கள் ஆடல் பயிற்சி அளிக்க வேண்டும்.

நிலவு : நான் பீலி நாட்டில் தடாரி வட்டம் என்னும் இடத்தில் வாழ்கின்றேன். அங்கு நீ வர ஏற்பாடு செய்து கொள்.

சாலி : நன்று! போய் வருகின்றேன்.

## காட்சி 3

[பெருமன்னன் மகள் முல்லையும், சாலியும், கிள்ளையும் குவளைப் பூக் குலுங்கும் நிழலில் அமைந்த திண்ணையில் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.]

கிள்ளை : ஆற்றூர் காரி மன்னனுக்கும், நம் நாட்டுப் பேரரசர்க்கும் மனத்தாங்கல் இருந்தால், பீலி நாட்டில் நான் ஏன் ஆடல் கற்றுக் கொள்ளக் கூடாது?

சாலி : நீ அதை அவர்களையே கேட்பது தானே.

கிள்ளை : கேட்டேனே சாலி.

சாலி : என்ன சொன்னார்கள்?

கிள்ளை : அவர்களா ? நீளமாகச் சொன்னார்கள், என்ன சொன்னார்கள் தெரியுமா? ''அதற்கு மேல் கேட்காதே — அரசியல் செய்தி''

முல்லை : கிள்ளை! அதோடு நிறுத்திவிடு இவ்வளவு கூட நீ வெளிப்படையாய்ப் பேசியிருக்கக் கூடாது.

கிள்ளை : ஏன் சாலி நீ கேட்டாயா உன் பெற்றோரை?

சாலி : கேட்டேன்.

கிள்ளை : கேட்டாயா? என்ன சொன்னார்கள்?

சாலி : உனக்கு சொல்லியது போலில்லை.

கிள்ளை : அப்படியா. என்ன?

சாலி : ''போகக்கூடாது''

கிள்ளை : ஏன் என்று கேட்டாயா?

சாலி : விட்டுவிடுவேனா?

கிள்ளை : உம்

சாலி : ஏன் என்றேன். அதற்கு அவர், ... கேட்காதே!

[அனைவரும் சிரிப்பு]

முல்லை : உங்கள் ஆவல் நிறைவேறாததற்கு நான் வருந்துகிறேன்.

கிள்ளை : இளவரசியே, என்கண்ணே, என்னை என் பெற்றோர் ''போ'' என்று சொன்னாலும் நான் உடனே போயிருக்க மாட்டேன். ஏன் தெரியுமா?

முல்லை : இதென்ன புதுமை?

சாலி : ஏன்?

கிள்ளை : கொஞ்ச நாளைக்கு மிக்க வேலையிருக்கிறது.

முல்லை : உனக்கா?

சாலி : என்ன கூடை முறம் கட்ட வேண்டுமா?

கிள்ளை : நன்றாகக் கேட்டாய். நீ சொன்னது பாதி சரி

முல்லை : கூடை முறம் ஒரு பாதி கட்டவேண்டும்; மறுபாதி? இவைகளில் எது சரி?

கிள்ளை : ''கட்டவேண்டும்''

சாலி : என்ன கட்டவேண்டும்?

முல்லை : விரைவில் சொல்லிவிடு?

கிள்ளை : மாலை கட்டவேண்டும். இளவரசிக்கு

முல்லை : விளங்கவில்லை.

சாலி : இளவரசிக்குத் திருமணமா?

கிள்ளை : உனக்கும் நினைவு இல்லை. முல்லை பிறந்த நாள் அடுத்த வெள்ளிக்கு.

முல்லை : ஆ!

சாலி : உனக்கு மட்டும் எப்படி நினைவு வந்தது?

கிள்ளை : முல்லை எப்போதும் என் நினைவில் நிலையாக இருக்கிறாள்.

முல்லை : கிள்ளை நீ என் மீது வைத்துள்ள அன்பு பயனற்றது.

கிள்ளை : அது உனக்குத் தெரியாதோ, அன்பு பயனை எதிர்பார்த்ததல்ல. பயனை எதிர் பார்த்தது எது தெரியுமா? வாணிகம்.

முல்லை : வாயாடி! போவோம்.

சாலி : கிள்ளையோடு பேசுவதில் தெவிட்டு ஏற்படுவதில்லை.

[அனைவரும் எழுந்திருக்கிறார்கள்]

அங்கம் 2

## காட்சி 1

[பிறை நாட்டின் அரண்மனையில் ஒரு பகுதி இளவரசி முல்லை மணித் தவிசில் வீற்றிருக்கிருள். தோழிமார் பலர் புடை சூழ்ந்திருக்கிருர்கள். முல்லையின் தந்தையும், பேரரசனுமாகிய வயவரி மன்னனும் பேரரசி கன்னலும் வருகிருர்கள். மங்கல முரசு அதிர்கின்றது]

பேரரசர் : வாழிய குழந்தாய். தமிழ் நன்று. அது தமிழர்க்கு உறுதி பயப்பது. அதை இன்னும் நீ பயில்க! தமிழறிவு பெறுக. பிறைநாட்டின் எதிர்கால அரசி நீ. அறம் இது, மறம் இது என்று ஆய்ந்துணர்க. வாழிய நீடு வாழிய!

பேரரசி : அன்புக்கொரு மகளே, முல்லையே மணம் எய்துக உனது பதின்மூன்ரும் ஆண்டு தொடங்கிற்று. நீ வாழிய!

முல்லை, உங்கள் வாழ்த்து நன்று. என்பால் தங்கட்குள்ள அன்புக்கு நன்றி! தந்தையார் வாழ்க, அன்னையார் வாழ்க. தமிழ் வாழ்க.

[முல்லை பணிகின்ருள்]

[பேரரசும் பேரரசியாரும் போகின்ருர்கள்]

நிலவு, சாலி, தாழை, பொன்னி, தோரை முதலிய பெண்கள், தத்தம் இயல்புக்கேற்ற கையுறையுடன் வருகிருர்கள்.

தோரை—தான் கொணர்ந்த தங்கப்பாளை யடுக்கிய வெள்ளியுறியை முல்லைக்குத் தந்து—வாழிய இளவரசியே என்று வாழ்த்துகிருள்.

**பொன்னி**—தான் கொணர்ந்த, ஒன்பது வகை மணிகள் அழுத்திய தலையணியாகிய சுட்டியை முல்லைக்குத் தந்து—வாழிய இளவரசியே! என்று வாழ்த்தி ஒருபுறம் அமைகிருள்.

**தாழை**—தான் கொணர்ந்த முத்துப் பரல் இட்ட காற்சிலம்பை முல்லைக்குத் தந்து,வாழிய இளவரசியே என்று வாழ்த்தி மற்ருெருபுறம் அமைகிருள்.

**சாலி**—தான் கொணர்ந்த எண் கோவையுள்ள இடையணியாகிய காஞ்சியை முல்லைக்குத் தந்து வாழிய இளவரசியே என்று வாழ்த்தி ஒருபுறம் அமைகிருள்.

**கிள்ளை**—தான் கொணர்ந்த, முல்லையில் தொடுத்த தானமுல்லைத் தொடயலை முல்லைக்குச் சூடி, வாழிய இளவரசியே என்று வாழ்த்த, இளவரசியாகிய முல்லை, அவளைக் கட்டித்தழுவித் தன் அண்டையில் நிறுத்தித் தானும் எழுந்து நின்று கூறுகிருள்.

அன்புள்ள தோழியர்களே,

என் பிறந்தநாட் சிறப்பை சிறக்க வைத்தீர்கள். உங்கள் வாழ்த்து என்னைப் பெருவாழ்வில் சேர்க்கத் தக்கது. நன்றி கூறுகிறேன்.

[மீண்டும் மங்கல முரசு முழங்குகிறது நிலவு வருமுன் மற்றவர்கள் போய் விடுகிருர்கள்]

## காட்சி 2

சாலி, தாழை, பொன்னி, தோரை நால்வரும் முல்லைக்கு வாழ்த்துக்கூறி வருகையில் தமக்குள் பேசிக் கொள்ளுகின்ருர்கள்:

தோரை: பேரரசு, பேரரசி இருவருக்கும் அன்புக்கு ஒருத்தி முல்லை இளவரசி; நாளைய பட்டத்தரசி அவள் இனிது வாழ்க !

பொன்னி : பிறை நாட்டின் தனியரசி முல்லை. அவளின் அடக்கம் அன்பு நன்றியறிதல் ஆகிய நற் பண்புகள் அவளுக்குள்ள மேன்மையை ஆயிரம் பங்கு அதிகப்படுத்துகின்றன.

சாலி : ஏன் தாழை நீ என்ன சொல்லுகின்றாய்?

தாழை : நம்மிடத்தில் அவள் அன்புடையவள். அவள் ஆட்சிக் காலத்தில் நாட்டு மக்கள் மேல் அவள் அன்புடையவளா யிருத்தல் வேண்டும். இருப்பாள். நல்லவள்.

சாலி: கிள்ளை நம்முடன் வரவில்லை. முல்லைக்குக் கிள்ளை மேல் மிக்க அன்பு. உயர்ந்த அணிகள், பொருள்கள் நாம் தந்தோம். கிள்ளை காசு பெறாத அலங்கல் கழுத்தில் இட்டாள் அதற் காக முல்லை இளவரசி கிள்ளையைத் தழுவிக் கொண்டாள். கண்டீர்களே! கிள்ளை எப்படி எவ ரிடம் வளைந்து கொடுக்க வேண்டும் என்பதை நன்றாய் அறிந்தவள். முல்லையும் பசப்புக்கு மகிழ்பவள் கிள்ளையின் வஞ்சகம் முல்லைக்குத் தெரியாது. தெரிந்து கொள்வாள்.

தோரை : மெய்தான்! நம்மிடம்ஒருமாதிரி; அவளிடம் வேறு மாதிரிதான் நடந்து கொண்டாள் முல்லை!

பொன்னி : கிள்ளை கொண்டுவந்தது எளியபொருள். அதற்காக முல்லை வருந்தவில்லை என்பதைக் காட்ட அவளிடம் கொஞ்சம் அதிக அன்பைக் காட்டினாள் வெளிக்கு. அது தவிர முல்லைக்கு நம்மேல் உள்ள அன்பு குறைவு என்று நாம் எண்ணலாமா?

கிள்ளை : சரி உனக்குத் தெரிந்தது அவ்வளவுதான். போகலாம் விரைவாய்! [மறைதல்]

## அங்கம் 3

### காட்சி 1

அரண்மனையின் ஒரு புறத்தில், முல்லை, கிள்ளை, சாலி மூவரும் பேசியிருக்கிறார்கள்.

**கிள்ளை ;** இளவரசி! ஏதாவது படிக்கலாமே.

**சாலி :** வேண்டாம் ஏதாவது விளையாடினால் நன்றாய் இருக்கும்.

**முல்லை :** படிக்கலாம் கிள்ளை! நீ போய், அம்மா நீராடும் அறைக்கு இந்தப் புறத்தில் ஊஞ்சலின் மேல் கவிதை நூல் இருக்கிறது. எடுத்து வா.

[அவள் சென்று எடுத்துவந்து, தானே அதைத் திறந்து பார்க்கிறாள்.]

**கிள்ளை :** இதைக்கேள் ! சாலி, கவனமாய்க் கேள் நீயும்.

பச்சை பசுந்தழைக் காட்டினிலே ஒரு
பக்கத்தில் பூத்திட்ட முல்லையைப் பார்
அச்சடையாளம் நல் வான்குளத்தில் மின்னும்
ஆயிரம் மீனெனத் தோன்றுமடி !
அச்சில் அடித்திட்ட வெள்ளிப் பணம் கையில்
அள்ளி இறைத்தது போல் இருக்கும் !
இச்சை நறுமணத் தால்அழைக்கும் — முல்லை
ஏன் என்று பார்க்கையிலே சிரிக்கும்!

[முல்லை சிரித்தாள்.]

**கிள்ளை :** முல்லை, ஏன் என்று பார்க்கையிலே சிரிக்கும் !

**சாலி :** முல்லைக்கு முல்லைப் பொட்டு !

[கிளியின் கூச்சல் கேட்கிறது]

முல்லை : சாலி ஓடு கிளி கதறுகிறது !

[அவள் ஓடிக் கூட்டொடு தூக்கி வருகிறுள். முல்லை அதைக் கையில் ஏந்திக்கொள்கிருள் கூட்டினின்று எடுத்து]

முல்லை : பத்துப் பணத்திற்கு வாங்கினேன். அப்போது இத்தனை அளவு சிறிது குழந்தை. இப்போது கத்தும் குரலுக்கு வையமும் போதாது. கையிலே வைத்திருந்தால் தான் சாது!

[தோழி வள்ளி வருகிருள்]

வள்ளி : அன்னையார் அழைத்தார்கள்.

முல்லை : எனக்கு விடை கொடுங்கள்.

கிள்ளை : சரி.

[கிள்ளையும் சாலியும் தம் வீடு செல்கிருர்கள்]

## காட்சி 2

[பேரரசி கன்னல் தன் படுக்கையறைப் பக்கம் உழவுகின்ருள், அவள் விழிகள் அங்கு பல பக்கங்களையும் கூர்ந்து பார்க்கின்றன. அவள் எதையோ தேடுகிருள்]

[முல்லை வருகிருள்]

முல்லை : ஏன் அம்மா அழைத்தீர்கள் ?

கன்னல் : நீ உணவு உண்ணுமல் இருப்பது உனக்கே தெரியவில்லையா! நேரம்ஆகிறது.

முல்லை : நீங்கள் என்ன தேடுகிறீர்கள். கவிதைச் சுவடியா?

கன்னல் : இல்லை.

முல்லை : பின்னென்னம்மா.

கன்னல் : அந்தக் கணையாழி ?

முல்லை : எந்தக் கணையாழி ?

கன்னல் : மாணிக்கக் கணையாழி ?

முல்லை : திடுக்கிடும் சேதி, உங்கள் உயிர் ஆயிற்றே? எங்கு விழுந்திருக்கும் !

கன்னல் : கூச்சலிடாதே, அது தவறியது உன் தந்தையார் அறிந்தால் வருந்துவார். அது மணநாளில் என் விரலில் அவர் இட்டது. இங்குதான் இருக்கும். நீ செல் உணவுண்ண !

முல்லை : நானும் தேடுகிறேன் அம்மா !

கன்னல் : உணவருந்திய பின் தேடு.

முல்லை : இதோ வந்துவிட்டேன். [போகிருள்]

கன்னல் : அதற்காக நீ செவ்வையாக உணவுண்ணாமல் ஓடிவந்து விடாதே.

## அங்கம் 4

### காட்சி 1

ஓய்வுகொள்ளும் அழகிய தனி அறையில் மனித் தவிசில் அரசர் வீற்றிருக்கிருர் உணவுண்ட பின். இருதோழியர் மயில் விசிறி கொண்டு விசிறுகிருர் கள். அவர் யாரையோ எதிர்பார்க்கிருர் வழக்கப்படி. வள்ளி வெற்றிலேச் சுருள் தட்டேந்தி அங்கு வருகி ருள். அரசர் கண்ணில் வியப்பு.

அரசர் : அரசியார் எங்கே வள்ளி? உடல் நலம் குறைவா ?

வள்ளி : கணேயாழி காணவில்லே. பணிப் பெண்கள் தேடுகிருர்கள் அரசியார் தேடுகிருர் தங்க ளிடம் மன்னிப்பு வேண்டினர்கள்.

அரசர் : எந்தக் கணேயாழி ?

வள்ளி : மாணிக்கக் கணேயாழி.

அரசர் : எனவே அரசியார் துன்பத்தில் ஆழ்ந் திருக்கிருர்கள். திருமணத்தில் நான் இட்ட கணேயாழி! அரசியாரை மெதுவாக என்னி டம் அழைத்து வந்துவிடு. நான் தேறுதல் கூறுகிறேன். பணிப்பெண்கள் தேடட்டும் போ.

[அவள் போகிருள்]

[அரசி வருகிருள். வள்ளியும் வருகிருள்]

அரசி : உங்களிடம் வைத்த அன்பு குறைந்து விட வில்லே. என் விழியை, என் நினேவை, தங்கள் கணேயாழி ஏமாற்றிவிட்டது.

அரசர்: கன்னல்! அதைப்பற்றி நீ வருந்தாதிருந்தால் போதும். முப்பது ஆண்டுகள் இன்பத்தை நல்கிக் கழிந்தன. வாழ்நாட்களில், ஐம்பது ஆண்டுகள் கழிந்தபின் திருமண கணையாழி காணமற்போனால், அதனால் குற்றமில்லை. நீ மறந்திரு. இம்மியளவு துன்பத்தையும் உன் நெஞ்சு தாங்காது.

அரசி: யார் எடுத்திருப்பார்? குற்றவாளியை விட்டு வைத்தால் இன்னும் இதுபோல நடக்குமே!

அரசர்: அரண்மனை ஆட்களையும், பணிப்பெண்களையும், காவலர்களையும், உடற்காப்பாளர்களையும், மற்றும் இங்கு வருவோர்போவாரையும் கேட்டு ஆராய்வோம்,

அரசி: கோள்நிலை வல்லுனர் கூறமாட்டாரா?

அரசர்: கோள்நிலை வல்லவர் கூறுவதைக் கொண்டு குற்றத்தை உறுதி செய்வதை முட்டாள் தனமென்று அறநூல் கூறுகிறது. உணர்வும் ஒத்துக்கொள்ளாது.

[முள்ளை வருகிறாள்]

முல்லை. அப்பா!

அரசர்: ஓடிவா குழந்தாய்.

[அருகில் வருகிறாள்]

முல்லை: அகப்பட்டதா அம்மா?

அரசி: இல்லை முல்லை!

அரசர்: உன்னிடம் வந்து பேசிப் போகும் பெண்களில் யார்மேலாவது ஐயப்பட இடமுண்டா குழந்தாய்!

முல்லை: இல்லை அப்பா கிள்ளை, சாலி, தாழை, பொன்னி, தோரை, உண்மையின் அடையாளங்கள், இனி இங்கு வரவேண்டாம் என்று அவர்களைச் சொல்ல நினைக்கிறீர்களா அப்பா.

அரசர்: வாழி வாழி நான் அப்படிச் சொல்லவே மாட்டேன்.

[சாலி வருகின்ருள்]

சாலி: இளவரசியார் இருக்கிருரா ?

முல்லே: அப்பா சாலி இங்கு வரலாமா ?

அரசர்: ஓ, நன்ருக !

முல்லே: சாலி உள்ளே வா !

[வருகிருள், முல்லே கை காட்டுகிருள். சாலி உட்கார்ந்தாள் பக்கத்தில்]

சாலி: பேரரசர், பேரரசியார் ஏதோ தனியாகப் பேசுகையில் நான் வந்தது இடையூருே என்னவோ, மன்னிக்க வேண்டுகிறேன்.

அரசி: அப்படி ஒன்றுமில்லே என் மாணிக்கக் கணேயாழி மறைந்து விட்டது அது பற்றிய ஆராய்ச்சி. அரண்மனே ஆட்கள் எடுத்திருப்பார்கள். அல்லது பணிப்பெண்கள். இல்லே என்ருல் அகப்பட்டு விடவும் கூடும்.

சாலி: இல்லேயம்மா, கிள்ளே எடுத்தாள் !

முல்லே: கிள்ளேயா ?

கன்னல்: அப்படியா !

அரசர்: நீ எப்போது பார்த்தாய் ?

முல்லே: நீ கண்ணுல் பார்த்தாயா ?

சாலி: இளவரசியே! நானும் கிள்ளேயும் உன்னே விட்டுப்பிரிந்து போகையில், கிள்ளேயின் இடையினின்று சிறு பொருள் ஒன்று விழுந்தது. கிள்ளே நானறியாதபடி அதை எடுத்தாள். நவிந்த விரல்களின் புறத்தில், சிவந்த ஒளி

அடித்தது. என்ன என்றேன்; ஒன்றுமில்லை என்று கூறி சாப்பிட்டபின் அரண்மனைக்குப் போகலாமா என்று, வேறு பேச்சைத் துவக்கினாள். அதை அவள் இடையில் செருகினாள். அது, துணியில் முடிந்த தங்கக்காசு அளவு காட்சி அளித்தது.

**அரசர்:** குழந்தாய்! நீ வருந்தலாகாது. நான் கிள்ளையை அறமன்றுக்கு அழைக்க வேண்டும். அவள் என் படைத்தலைவர் மகள், உனது அன்புள்ள தோழி ஆயினும் அறத்தின் முன் அனைவரும் நிகர்.

**முல்லை:** அவள் நல்லவள் அப்பா.

**அரசர்:** அறமன்றம் அவளை நல்லவள் என்று உறுதி செய்யட்டுமே!

**சாலி:** அரசே, அவள் தீயவள்.

**அரசி:** அவள் தீயவளானால், அறமன்றம் தீர்ப்புக் கூறட்டும்.

**அரசர்:** மன்றம் நோக்கிச் செல்லுவேன். இதில், சேர்க்கையுடையவர் அனைவரையும் மன்று நோக்கி வரும்படி அழைப்பு அனுப்புகிறேன்.

**சாலி:** வணக்கம்.

[போகிறாள்]

**கன்னல்:** கிள்ளை நல்லவள் என்று நான் எண்ணினேன்.

**முல்லை:** இப்போதும் அவள் நல்லவள் தான் அம்மா

[அரசர் போகிறார். முல்லை தலை குனிந்தபடி வருத்தத்தோடு தன் அறை நோக்கிச் செல்லுகிறாள்]

## அங்கம் 5

### காட்சி 1

[வீட்டில் படைத்தலைவன் மாழையும், கண்ணி என்னும் அவன் மனைவியும் தாங்கொணாத் துன்பத்தோடு தலை சாய்த்து நாற்காலியில் துவள்கின்றார்கள். எதிரில் கண்ணீர் ததும்ப கிள்ளை நிற்கிறாள்]

மாழை: நீ எடுக்கவில்லையானால், சாலி ஏன் அப்படிச் சொல்லுகிறாள்?

கிள்ளை: என்னை ஏன் அவள் இத்தனை பெரிய குற்றத்திற்கு உட்படுத்துகிறாள் என்பது எனக்கே விளங்க வில்லை. அவள் முழுதும் பொய் சொல்லுகிறாள். அன்னை தந்தைக்கும் தெரிவிக்காமல் அந்த மாணிக்கக் கணையாழியை நான் எப்படி அணிந்து கொள்ள முடியும்? அப்பா, இத்தனை பெரிய குற்றம் நான் இழைப்பவளா? இல்லை. இல்லவேயில்லை அன்னையே!

கண்ணி: நாழிகையாகிறது மன்றுநோக்கி கூட்டிச் செல்லுங்கள்.

மாழை: நான் போகமாட்டேன். மானக்கேடு தலை தூக்கமுடியவில்லை. மகளே, நீ போ. அங்கேயாவது உண்மை கூறு!

[ஓவென்று அலறிக்கொண்டு கிள்ளை ஓடுகிறாள்]

## காட்சி 2

**அறமன்றம்:** பிறைநாட்டரசர் வயவரி மன்னர் பெருந் தவிசில் வீற்றிருந்தார் இடப்புறமாக, வழக்கெடுத்துரைப்போன் வளன் அமர்ந்திருந் தான் வலப்புறமாகக் குறிப்பெடுக்கும் கொன்றை அமைந்திருந்தான், எதிரில் முன் வரிசையில், இளவரசி முல்லையும், அமைச்சன் மகள் சாலியும் இருந்தனர். பின்வரிசையில், அமைச்சு வல்லுளி உட்கார்ந்திருந்தான். தாழை தோரை ஒரு புறம் காணுமாறு வந்திருந்தனர் கிள்ளை குற்றவாளி யாக அரசர்க்கு முன் நின்றிருந்தாள் காவலர் பணியாளர் பலர் பல பக்கங்களிலும் நின்றிருந் தனர். பெருமக்கள் பலர் காணுமாறு போந் திருந்தனர்.

**பேரரசு எழுந்து**

அறமன்றத்தைத் துவக்கம் செய்தேன். நடுநிலை கோணாது தீர்ப்பளிப்பதாய் உறுதி கூறுகிறேன்.

**வழக்கெடுத்துரைக்கும் வளன் கூறினான்:**

பிறைநாட்டின் பேரரசியார் கன்னல் அம்மை யாரின் மாணிக்கக் கணையாழி காணாமற் போயிற்று. அதைக் கிள்ளை என்னும் இவள்— படைத்தலைவர் மாழையின் மகள் களவு செய்த தாகப் பேரரசியார் நினைக்கிறார்கள். இவ் வழக்கின் சான்றினராக இளவரசியார் முல்லை யும், அமைச்சர் மகள் சாலியும் அழைக்கப்பெற் றுள்ளார்கள். மன்றில் கூடியுள்ளவர்கள் இவ் வழக்கில் உதவி செய்யும்படியும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**அரசு:** கிள்ளையே, அறமன்றத்தின் முன் மெய் கூறு வதாக நீ உறுதி கூறு.

கிள்ளை: நான் இந்த அறமன்றத்தின் முன் போய் கூறுவேனாயின், மக்களில் தன்னை உயர்ந்தவன் என்று கூறுகின்ற கொடியோன் செய்யும் கொடுமை செய்தவள் ஆவேன்.

நான் இந்த அறமன்றத்தின் முன் பொய் கூறு வேனாயின். உழுதவனைக் கூலிக்காரன் என்று கூறி உழுதவனைத்தான் பறிக்கும் முதலாளி செய்யும் தீமையைச் செய்தவன் ஆவேன்.

நான் இந்த அறமன்றத்தின் முன் பொய் கூறு வேனாயின், தமிழ் நாட்டில் வாழ்ந்து தமிழால் ஊழியம் பெற்றுத் தமிழை யன்றி அயல் மொழியை ஆதரிக்கும் சழக்கன் செய்யும் சழக்குச் சூழ்ந்தவள் ஆவேன். நான் இந்த அறமன்றத்தின் முன் மெய்யே கூறுவதாக உறுதி கூறுகிறேன்.

அரசர் : கிள்ளாய் நீ அந்த மாணிக்கக் கணை யாழியை எடுத்ததுண்டா?

கிள்ளை : நான் எடுத்ததில்லை பேரரசே!

அரசர் : அக்கணையாழி இப்போது உன்னிடமோ, உன்னால் பிறரிடமோ இல்லையா?

கிள்ளை : என்னிடம் இல்லை. நான் அதைப் பிறரிடம் கொடுத்து வைத்ததும் இல்லை பேரரசே!

அரசர் : சாலி இதுபற்றி உனக்கென்ன தெரியும்?

சாலி : கிள்ளை வைத்திருக்கக் கண்டேன்

அரசர் : என்றைக்கு ?

சாலி : நேற்று

அரசர் : நேற்று அரண்மனைக்குப் போனதுண்டா?

சாலி : நானும் கிள்ளையும் போனதுண்டு.

அசரர் : என்ன வேலை ?

சாலி : இளவரசி முல்லைக்கு நாங்கள் தோழிகள்.

அரசர் : இவை மெய்தானா கிள்ளாய்?

கிள்ளை : அவை அனைத்தும் மெய்

அரசர் : முல்லையே இவை மெய்யா?

முல்லை : ஆம் மெய்.

அரசர் : நீ என்ன கூறுவாய் கிள்ளையே !

கிள்ளை : என்னிடம் எப்போது பார்த்தாள் சாலி?

சாலி : நேற்றுக் கையில் வைத்திருந்த போது தான் சாலி பார்த்தாள்.

கிள்ளை : எந்த இடத்தில்

சாலி : இளவரசியை விட்டு வெளிவருகையில்

கிள்ளை : எப்படி வைத்திருந்தேன்?

சாலி : கையில்

கிள்ளை : எந்தக் கையில் ?

சாலி : உம் — வலக்கையில்!

கிள்ளை : என் வலக்கையில் அச் சிறிய பொருளை வைத்திருந்தால் அது எப்படித் தெரிந்தது சாலிக்கு?

சாலி : நான் தான் என்ன அது என்று கேட்டேன் கிள்ளைதான் இது மாணிக்கக் கணையாழி என்று கூறினாள்.

கிள்ளை : அது பற்றிச் சாலி கிள்ளையை ஒன்றும் கேட்கவில்லையா ?

சாலி : இல்லை

முல்லை : பேரரசே நான் ஒன்று கூற முன்வருகிறேன். சாலி முதலில் என்னிடமும் தங்களிடமும், கூறியது வேறு அவள் கூறினாள்: கிள்ளையிடமிருந்து ஏதோ ஒன்று கீழ் விழுந்தது. அது சிவப்பொளியுடையதாய் இருந்தது. அதை அவள் இடையில் செருகினாள், அது தங்கக் காசைத்துணியில் அழுத்திய அளவில் தோன்றிற்று என்றாள்.

இப்பொழுது சொல்வன அனைத்தும் வேறு! கிள்ளை நல்லவள் இப்படிப்பட்ட குற்றம் செய்பவள் அல்ல. சாலி கிள்ளையைக் குற்றத்தில் உட்படுத்த எண்ணி இவ்வாறு வேண்டு மென்றே கூறுகிருள் என்று எனக்குத் தோன்றுகிறது.

அரசர் : மன்றிலுள்ளவர்களே! அரண்மனைப் பொருள் களவு போனுல், அதுபற்றி யார் மேல் சிறிது ஐயம் ஏற்பட்டாலும் அவர் களை அயல் நாடு கடத்தி வைக்கும்படி அற நூல் கட்டளையிடுகிறது.

நான் அதன்படி, கிள்ளை பீலி நாட்டில் நாலாண்டு வாழ்ந்திருக்கத் தீர்ப்பு கூறி னேன் இதன்படி கிள்ளை இன்றே பீலி நாட்டுக்குப் புறப்பட்டுவிடவேண்டும்.

[அனைவரும் கண்கலங்குகிருர்கள்]

கிள்ளை : பீலி நாட்டிற்கா? நம் சிற்றரசிருக்கும் இந்தப் பீலி நாட்டுக்குத் தானே பேரரசே?

அரசர் : ஆம் இன்றே பயணத்தைத் தொடங்கு! [கிள்ளை சிரிப்பில் குதித்தாள். அவள் முல்லையிடம் ஓடிவந்து உரத்த குரலில்,]

இளவரசியே, என் பொருட்டு நீ வருந்து கின்ருயா? நீ மகிழ்ச்சியடை! சாலியின் சூழ்ச்சி; என்னைப் பீலியில் சேர்த்தது அவள் என்மேல் இல்லாததைச் சொல்லி என்னை அந்த நிலாவிடம் சேர்த்தாள். நாலாண் டில், எனக்கு, ஆடல் பாடல் நன்ருய் வந்து விடுமே.

முல்லை: உனக்கு நல்லதாயிற்று! வாழி வாழி, உனக்கு ஏற்பட்ட தண்டனை உன்னை இனிக்க வைத்து விட்டதே ஆட்டம் உனக்கு ஒரே ஆண்டில் வந்துவிடுமே!

[இதைச் சாலி கேட்டுத் திடுக்கிடு கிருள். அவள் தனக்குள்]

முல்லை அவள் மேல் அன்பாய் இருந்தது எனக்குப் பிடிக்கவில்லை. அதனுல் இந்தச் சூழ்ச்சி செய்தேன், அதன் பயனுக அவள் நிலாவையடைந்து விட்டால், பிறை நாட்டின் பாராட்டும் புகழ்ச்சியும் கிள்ளைக்குத் தான்!......

[அந்தச் சாலி, அரசனை நோக்கிக் கூறு கிருள்]

பேரரசே! குற்றவாளியாகிய கிள்ளை அந்தப் பீலி நாட்டில் ஆடல் கற்றுக்கொள்ள லா கா து என்று தீர்ப்பளிக்க வேண்டு கிறேன்.

[அரசர் முதல் அனைவரும் சிரிக்கின்றனர், சாலியின் தந்தையான அமைச்சன் முகம் கவிழ்ந்து கொள்ளுகிறது]

அரசர்: சாலி, உனக்கு யார்மேல் எப்படிப்பட்ட கெட்ட எண்ணம் உண்டாகிறதோ அதையெல்லாம் நான் தீர்ப்பாகச் சொல்லித் தீர்த்துவிட வேண்டுமோ? உன் வாய்ச் சொல்லைக்கொண்டு கிள்ளையைத் தண்டித்தது சரியில்லை என்று நன்ருக விளங்கி விட்டது.

கிள்ளை: அப்படியானுல், தாங்கள் எனக்களித்த தீர்ப்பை மாற்றவா போகிறீர்கள்?

[அனைவரும் சிரிக்கிருர்கள்]

அரசர்: அஞ்ச வேண்டாம். அப்படி ஒன்றும் இல்லை

கிள்ளை: நான் இப்போதே தானே போய் விட வேண்டும்? இப்படித்தான் தீர்ப்பளித்தீர்கள் என்று என் தந்தையாரிடம் நான் சொன்னுல் அவர் நம்பமாட்டார். வேண்டுமென்று நானே சொல்லுவதாக அவர் நினைப்பார். அவரையும் அழைத்துத் தீர்ப்பைச் சொல்லி விடும்படி தங்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

முல்லை: ஆம் ஆம்!

[மீண்டும் சிறிப்பு]

இதற்குள் பேரரசியார் மன்று நோக்கி வருவதாகக் கூறத் தோழி ஒருத்தி அங்கு வருகிருள். அவளை அனைவரும் நோக்கியிருக்கிருர்கள்.

தோழி: பேரரசே! பேரரசியார் மன்று நோக்கி வருகிருர்கள்.

[அனைவரும் எழுந்து நிற்கிருர்கள். அரசியார் அரசரிடம் கணையாழியை நீட்டுகிருர்]

பேரரசி: அகப்பட்டு விட்டது. கிள்ளை குற்றவாளியல்ல.

கிள்ளை: அதெப்படி? தீர்ப்பை மாற்றக் கூடாது பேரரசே!

அரசர்: நீ குற்றவாளி என்றுதானே அந்தத் தீர்ப்பைச் செய்தேன். இப்போது நீ குற்றவாளியில்லை, தீர்ப்பை மாற்றத்தானே வேண்டும்?

கிள்ளை: நான் தீர்ப்பளிக்கு முன் எப்படியோ அப்படித்தான் இப்போதும் அப்போதைக்கு இப்போது என்ன வேறுபாட்டைக் கண்டீர்கள்?

அரசர்: தீர்ப்புக்கு முன் இருந்த நிலையில் நீ இப்போது இல்லையே!

**கிள்ளை:** நான் இப்போதும் குற்றவாளியில்லை. அப்போதும் குற்றவாளியில்லையே. தீர்ப்பை ஏன் மாற்ற வேண்டும்?

**அரசர்:** அப்படியா நீ சொல்வதும் ஒரு வகையில் சரியே நீ என்ன சொல்கிருய், சாலி!

**சாலி:** நான்தான் குற்றவாளி, எனக்குத்தான் அந்தத் தீர்ப்பை ஏற்பாடு செய்யவேண்டும்.

**அரசர்:** அது ஏன்? நீ எப்படிக் குற்றவாளி?

**சாலி:** நான்தான் முதலில் அந்தக் கணையாழியை எடுத்தேன். பிறகு வைத்து விட்டேன். ஆகையால் நான்தான் குற்றவாளி. [சிரிப்பு]

**பேரரசி:** எவ்விடத்திலிருந்து எடுத்தாய் ?

**சாலி.** அங்குத் தான்.........

**பேரரசி:** எங்கு?

**சாலி:** தாங்கள் நீராடும் கட்டத்தின் இப் புறமிருந்த கண்ணுடிச் சிலையின் கீழிலிருந்து எடுத்தேன்

**பேரரசி:** எங்கு வைத்தாய்?

**சாலி:** அங்குதான் வைத்தேன்.

**பேரரசி:** இல்லை இல்லை. நீ கணையாழியை எடுக்கவுமில்லை; வைக்கவுமில்லை. ஆடல் கற்றுக் கொள்ள விரும்புகிருய் நிலாவிடம் பாவை விளக்கின் அடியில் கணையாழியை நான் வைத்து மறந்தேன். இப்போது தான நினைவு வந்தது.

**அரசர்:** ஆனல், நான் உனக்குத் தீர்ப்புக் கூறட்டுமா சாலி?

**கிள்ளை:** எனக்களித்த தீர்ப்பு மாறுதல் கூடாது !

**அரசர்:** அதையும் மாற்றித்தானுக வேண்டும். கேளுங்கள் சாலி நல்ல பெண்ணுகிய கிள்ளை மேல் பொய்ப்பழி கூறியதால் சாலி கிள்ளையை மன்னிப்புக் கேட்க வேண்டும். இந்தத் தீர்ப்பு நிறைவேறிய பின, அரண்மனைப் பொருளில் ஆடல் அரங்கு ஒன்று அமைத்து, இந்நாட்டின்

ஆடற்சாலை முன்னேற்றத்திற்கு, நிலாவை வரவழைத்து, கிள்ளை, சாலி முதலிய அனைவர்க்கும் சொல்லி வைக்கச் செய்ய வேண்டும்! என்ன!

கிள்ளை: சாலி, என்னை மன்னிப்புக்கேள் விரைவில்.

சாலி: மன்னிக்க வேண்டும்—எங்கே பேரரசே, ஆடல் அரங்கம்?

அரசர்: ஆடற்கலை நம் நாட்டில் எழுக. குழந்தை களே உங்கள் விருப்பம் நன்று. இதோ அனைத்தும் ஏற்பாடு செய்துவிடுகின்றேன்,

## காட்சி 3

[பிறை நாட்டில் புதிதாக அமைத்த அரங்கில், நிலாவினால் பயிற்றப்பட்ட பெண்கள், கிள்ளை, சாலி, தாழை, தோரை, முல்லை முதலியவர்கள் ஆடுகின்றார்கள்.]

நிலா பாடுகிறாள்.

செங்கதிர் எழுந்தான் திரைக்கடல் மேலே
சிரிக்கும்செந் தாமரை போலே!
எங்கணும் ஒளியே! எங்கணும் உணர்வே!
இனிதாய் மலர்ந்தது காலை!
ஏரினைத் தூக்கி உழவர்கள் தொடர்ந்தார்!
எருதுகள் முன்செல்ல நடந்தார்!
ஊரினிற் பெண்கள் நீர்க்குடம் சுமந்தே
உவப்புடன் குளக்கரை அடைந்தார்!
வாணிகர் கடைகளைத் திறந்திடு கின்றார்
மாணவர் ஏட்டோடு சென்றார்.
வீணையைப்போல் அங் காடிகள் கூவி
வீதியெல்லாம் நடக் கின்றார்.
எழுந்தன அறங்கள் நிறைந்தன அன்பும்!
ஏகின ஏகின துன்பம்!
பொழிந்தன பொழிந்தன தமிழரின் நாட்டில்
புதுமைகள்! எங்கணும் இன்பம்!

# கவிஞர் பாரதிதாசன் நூல்கள்

பாரதிதாசன் கவிதைகள்

பாண்டியன் பரிசு

எதிர்பாராத முத்தம்

அழகின் சிரிப்பு

தமிழியக்கம்

காதல் நினைவுகள்

நல்ல தீர்ப்பு

அமைதி


## செந்தமிழ் நிலையம்

இராமச்சந்திரபுரம் :-: புதுக்கோட்டை மாவட்டம்

மதராஸ் ரிப்பன் பிரஸ், புதுக்கோட்டை